International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 07 Issue: 02 April to June 2025 www.irjtsjournal.org

# ஒப்பீட்டு நோக்கில் களவும் கந்தருவமும்

**முனைவர் கி. அய்யப்பன்**

கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை,

உ. நா. அரசினர் கல்லூரி

பொன்னேரி- 601204

**முன்னுரை**

தமிழ்ச் சமூகத்தில் காதலின் பரிணாமம் என்பது சங்க காலம் தொட்டு தற்காலம் வரை தொடர்ந்து கொண்டேதான் உள்ளது. சங்க காலத்தில் அரசர்கள் கொண்ட காதலும், களவு மணமும் எண்ணற்ற இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கின்றன. அரசர்கள் காலம் முடிந்து நமது கருப்பு, வெள்ளை திரைப்பட காலத்தில் காதல் மிகவும் புனிதமானதாகக் காட்டப்பட்டாலும், உண்மை வாழ்வில் அதை ஏற்றுக் கொண்டவர்களும், காதலில் வெற்றி பெற்றவர்களும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான். தமிழ்நாட்டில் பல வகையான சாதி, மதங்களும் அவற்றிற்கான கட்டுப்பாடுகளும் ஏராளம். பாரம்பரியமிக்க தமிழ் மக்களின் மரபுகளில் திருமண முறை என்பது மிகுந்த கட்டுப்பாடு மிக்கது. எண் வகையான திருமணங்கள் குறித்து தொல்காப்பியர் கூறினாலும், இதில் தமிழரின் திருமணமாகக் கருதப்படுவது களவாகும். தமிழரின் களவு போன்று காணப்படுகிற கந்தருவத்தையும், அது எவ்வாறு களவு மணத்திலிருந்து வேறுபடுகிறது என்பதை ஆராய்வதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

**களவு என்பது**

தொல்காப்பியம் களவு ஒழுக்கத்தை நான்கு வகைப்படுத்துகிறது. அவையாவன,

"காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
பாங்கோடு தழாலும் தோழியிற் புணர்வுமென்று
ஆங்கநால் வகையினும் அடைந்த சார்போடு
மறையென மொழிதல் மறையோர் ஆறே" (தொல். செய்யுளியல், நூ.178)

என்று கூறுகிறது தொல்காப்பியம், மனம் ஒத்த இருவர் தாமே கூடி புணர்வது. இதை இயற்கைப் புணர்ச்சி எனவும் கூறுவர். இயற்கைப் புணர்ச்சி கொண்ட தலைவன் தலைவி மீண்டும் அவ்விடத்தே சென்று கூடுதல். தோழனைத் தலைவியிடம் தூது அனுப்பி அவளைக் குறியிடத்தே வரச்சொல்லிக் கூடுதல். தலைவியின் தோழி வழியே தூது அனுப்பி அவளைக் குறியிடத்தே வரச்சொல்லி கூடுதல் எனக் களவொழுக்கத்தை நான்கு வகைபடுத்துகிறது.

**கந்தருவம்- யாழோர் கூட்டம் சொற்களின் பொருள்**

காந்தர்வம் என்பது நான்கு வகை வேதங்களில் சாம வேதத்தின் உபவேதம். அதாவது நுண் கலைகள் குறித்த அறிவியல். காந்தர்வம் என்பது பெற்றோர்களுக்குத் தெரியாமல் காதல் புரிந்து, மணம் செய்து கொள்வது. தொல்காப்பியர் தென்னாட்டு வழக்குகள் சிலவற்றை வடநாட்டு வழக்குகளோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிட்ட யாழோர் என்னும் கந்தருவர் என்போர் ஒரு கூட்டத்தினராவர். இவர்கள் இமயமலை அடிவாரங்களில் வாழும் அழகிய தோற்றமுடைய மக்கள். இவர்களுள் ஆடவரும் மகளிரும் ஒழுக்கத்தால் சிறிது தளர்ந்தவர்கள். தொல்காப்பியர் தமிழர்களின் களவு ஒழுக்கம் கந்தருவர் வழக்கத்தை ஒருபுடை ஒக்குமென கூறுகிறார். “யாழோர் கூட்டம் என்பது காந்தருவமணம்”(கௌமாரீஸ்வரி, 2012; 1224 ) என்று தமிழ்மொழி அகராதி கூறுகிறது. காந்தருவம் என்பது “இருநூற்றிருபத்து நான்கு புவனங்களினொன்று, காந்தருவமணம், காந்தருவவேதம், ஒரு இசைப்பாட்டு, ஓர்மலை”(சந்தியா நடராஜன், 2004;590 ) எனப் பொருள்படும் என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருளுரைக்கிறது. பிறர் கொடுப்பதும் கொள்வதும் இல்லாமல் தாமே எதிர்ப் பட்டுக் கண்டவுடனே காதல் மண்டி ஒருபாலும் கோடாமல் இருபாலும் கலந்து மகிழும் இன்ப மரபினர் ஆதலால் அன்பு கலங்கனிந்த அந்தக் கந்தருவ வழக்கம் காந்தருவம் என வந்தது.

கந்தருவம் ஆவது: "ஒத்த குலனும், குணனும், அழகும், அறிவும், பருவமும் உடையார், யாருமில் ஒரு சிறைக்கண் அன்பு மீதூரத் தாமே புணர்ந்து ஒழுகும் ஒழுக்கம். என்பதனை,

"முற்செய் வினையது முறையா வுண்மையி
னொத்த விருவரு முள்ளக நெகிழ்ந்து
…………………………
தமிழியல் வழக்கமெனத்
தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே" (அவிநயம், 70)

என்கிறார் அவிநயனார்.

**களவும்- கந்தருவமும்**

களவு என்பது "நட்புக்குரிய பருவத்தில் இருக்கும் ஒரு மகனும் ஒரு மகளும் ஒருவரை ஒருவர் சந்தித்தபோது தமக்குள் ஒரு பிணைப்புணர்வு ஏற்பட்டு மீண்டும் சந்திக்க விரும்பிச் சந்தித்துப் பழகுவது 'களவு' எனப்படுகிறது. இந்தச் சந்திப்பும் பழக்கமும் இரண்டு வீட்டார்களுக்கும் தெரியாமலேயே நடப்பதால் வீட்டார் பார்வையில் 'களவு' என்று கருதப்பட்டிருக்கிறது. களவு என்றே பெயரும் பெற்றுள்ளது" என்று ஞானக்கூத்தன் கூறுகிறார்.

களவு மணம் என்பது இன்றைய காதல் திருமணம் எனக் கூறப்படும் வகையைச் சேர்ந்ததாகும். இதனைத் தான் நமது சங்க இலக்கியங்கள் களவியல் என்று கூறுகின்றது. எடுத்துக்காட்டாக தொல்காப்பியர் கூறும் களவியல் பண்பாடாவது,

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR

"ஒன்றே வேறே என்றிருபால் வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்தக் கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே"(தொல். பொருள், நூ.90)

எனும் நூற்பாவில், திருமணத்திற்கு உரிய பருவம் எய்திய ஆணும் பெண்ணும் தாமே எதிர்ப்பட்டு காதலித்து மணந்துக் கொண்டனர். இவ்வாறு மணப்பது அவரவர் விதியின் வழியே நிகழும் என்கிறார் தொல்காப்பியர். மற்றத் திருமண முறைகள் இன்றைய வாழ்க்கைச் சூழலுக்கும் நம் மரபிற்கும் ஒவ்வாதவை எனலாம்.

எண்வகைப்பட்ட வேத வழிப்பட்ட மணமுறைகளில் ஒன்றாக இடம் பெறும் கந்தருவம் என்பது தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் களவுக்கு இணையானதாகக் கருதப்படுகிறது. இம்முறையில்தான் தலைமக்களின் அன்புக்கு முதன்மை உள்ளது. முன் ஏற்பாடும் திட்டமிடுதலும் இன்றி இயற்கையாய் எதிர்ப்பட்ட இருவரும் விரும்பி, உளம் ஒத்து, அன்பு கலந்து கூடுகின்ற இம்முறையே தமிழ் மரபு வழிப்பட்ட களவுக்கு இணையானது. இவ்விளக்கங்களைக் கொண்டு 'தலைமக்கள் தாமே எதிர்ப்பட்டுப் பிறர் அறியாதவாறு அன்பு காட்டி வாழும் காதல் வாழ்வே - களவு' என வரையறை செய்துகொள்வது பொருத்தமுடையது ஆகும்.

களவும் கந்தருவமும் தம்முள் வேறுபாடுடையன. அதனை விரிவாகக் காணுதல் தகும். கந்தருவம் என்பது திருமண வகைகளுள் ஒன்றாகும். ஒரு வகையில் அது கற்பொழுக்கமாகின்றது. ஆனால் களவு என்பது திருமணமன்று, திருமணத்துக்கு முந்திய மறையொழுக்கமாகும். களவின் பயன் கற்பாகும். களவானது கற்பில் முதிர்தலே சிறப்பாகும். "கந்தர்வருக்குக் கற்பின்றி அமையவும் பெறும்: களவோ கற்பின்றி அமையப்பெறாது"(தொல். கள. நச். ப.5) என்று நச்சினார்க்கினியரின் உரையின் மூலம் அறியலாகிறது. மேலும்,

"மா மயில் அன்னார் மறையில் புணர் மைந்தர்
காமம் களவிட்டு கைகொள் கற்பு உற்றென"(பரிபாடல், 11:41-42)

என்னும் பாடல் வரிகள் "களவில் புணர்கின்ற காதலரையுடைய சிறந்த மயில்போன்ற மகளிர், அவர்கள் காம இன்பச் சிறப்புடைய களவொழுக்கத்தைக் கைவிட்டு இழிந்த கற்பொழுக்கத்தை மேற்கொண்டு அக்கணவனின் இல்லத்தில் போய் அடங்கும்"(மாணிக்கனார், 1999:296) என்று கூறுவதை அறியமுடிகிறது.

"கற்பெனப் படுவது களவின் வழித்தே"(இறையனார் அகப்பொருள், நூ. 15)

என்னும் பாடலின் மூலமும் களவின் வழி நிற்பதே கற்பாகும் என்பதை அறியமுடிகிறது.

களவு நெறிக் குறித்து வ. சுப. மாணிக்கனார் பின்வருகின்ற விளக்கத்தைத் தருகிறார். "திருமண வாழ்வு என்னும் கற்பியலுக்கு இரு நெறிகள் உள. களவுநெறி, மரபுநெறி என்று அவை சொல்லப்படும். 'மறை வெளிப்படுதலும் தமரிற்பெறுதலும்' என்பர் தொல்காப்பியர். இவ்விரு நெறிகளும் களவே சங்க இலக்கியத்துப் பாடல் சான்றது"(மாணிக்கனார், 2012;101-102) என்று கூறுகிறார். "தொல்காப்பியர் தமிழர்

வழக்காகிய களவொழுக்கம் கூறினாரேயன்றி ஆரிய மனம் பற்றிய சேதிகளைக் கூற வந்தாரல்லர்."(இராகவையங்கார்,1922;40) என்று மு. இராகவையங்கார் களவு நெறி தமிழர் நெறியேயென உறுதிபெறக் கூறுகின்றார்.

எனவே "களவு நெறியானது கந்தருவத்தோடு களவிற் கூடுதல் என்னும் ஒப்புமையுடையதேயன்றி, வேறெவ் வகையிலும் ஒவ்வாது என்பதும் இரண்டும் வெவ்வேறு ஒழுக்கத்தைச் சார்ந்தவை என்பதும்"(பகவதி கோவிந்தன், 2018:173) தெரிந்துகொள்ள முடிகிறது.

**உரையாசிரியர் பார்வையில் களவும் கந்தருவவமும்**

தமிழில் முழுமையாகக் கிடைத்த முதல் நூல் தொல்காப்பியம். இந்நூலின் பொருளதிகாரத்தின் களவியலில் எண்வகை திருமணங்கள் கூறப்படுகிறது.

"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்" (தொல்.பொருள்; நூ.89)

எனும் நூற்பாவிற்கு உரை எழுதும் இளம்பூரணர் "1. பிரமம் - கன்னியை அணிகலனுடன் பிரமச்சாரிக்குத் தானம் கொடுப்பது. 2.பிரசாபத்தியம் - கோத்திரம் பார்த்துப் பெற்றோர் கொடுப்பது. 3. ஆரிடம் - மணமகனிடம் பரிசம் வாங்கிக்கொண்டு பெண் கொடுப்பது. 4.தெய்வம் - வேள்வி செய்வோர் பலருள் ஒருவனுக்குக் கொடுப்பது. 5. காந்திருவம் - கருத்து ஒருமித்த இருவர் தாமே கூடி இணைவது. 6. அசுரம் - வில்வித்தை போன்ற திறமையைக் காட்டிப் பெண்ணைப் பெறுவது. 7.இராக்கதம் - பெண்ணைத் தூக்கிச் சென்று திருமணம் செய்துகொள்வது. 8. பைசாசம் - தூங்கும் பெண்ணிடமும், கள்ளுண்ட பெண்ணிடமும் உடலுறவு கொள்வது." (சிவலிங்கனார், 1994; 10) இந்தத் திருமண முறைகளைத் தமிழ்ப்பெயர் சூட்டிக் குறிப்பிடும் இளம்பூரனர் "1. அறன்நிலை, 2. ஒப்பு, 3. பொருள்கோள், 4. தெய்வம், 5. யாழோர் கூட்டம், 6. அரும்பொருள் வினை, 7. இராக்கதம், 8. பேய்நிலை." (சிவலிங்கனார், 1994; 10) என்று கூறுகிறார்.

"துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே"(தொல்.பொருள், நூ.89)

எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர், "துறையமை நல்யாழ்த்துணைமை யோராவார் கந்திருவர். அவர் இருவராகித் திரிதலின் துணைமையோர் என்றார். துணைமையோர் இயல்பாவது அவர் ஒழுகலாறோடு ஒத்து மக்கண்மாட்டு நிகழ்வது என்று விளக்கம் கூறினார். நச்சினார்க்கினியர் தம் விளக்க உரையில், கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும், ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையா தென்றற்குத் துறைமை என்றார் என்று குறிப்புரை எழுதுவர். துணைமையோர் இயல்பு என்பதற்குச் சிவலிங்கனார் "கந்தருவ ஆண் ஒருவனும் பெண் ஒருத்தியும் வேறு வேறிடத்திலிருந்து வந்தவர்கள் ஓரிடத்து எதிர்ப்பட்டபோதே உடலுறவு கொள்வது" (சிவலிங்கனார்,1994; 11)என்று விளக்கம் தருகிறார்.

கந்தருவமாவது, கந்தர்வ குமாரரும் கன்னியரும் தம்முள் எதிர்ப்பட்டுப் புணர்வது. இதனை,

"அதிர்ப்பில்பைம் பூணாரும் ஆடவரும் தம்முள்
எதிர்ப்பட்டுக் கண்டியைதல் என்ப – கதிர்ப்பொன்யாழ்


© 2025, IRJTSR

முந்துஇருவர் கண்ட முனிவுஅறு தண்காட்சிக்
கந்தருவர் கண்டகலப்பு" (தொல். பொருள், நூ. 92)

என்ற நூற்பாவில், மகளிரும் மைந்தரும் தம்மில் எதிர்ப்பட்ட அளவில் உள்ளப் புணர்ச்சி உற்றுப் பின் மெய்யுறு புணர்ச்சி கோடல்யாழினை உடைய கந்தருவர் கண்ட வெறுப்பற்ற மேதக்க காட்சியினை உடைய கந்தருவர் கண்ட மணம் என்பதை அறிய முடிகிறது.

"அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்"(இறையனார் அகப்பொருள். சூ. 1)

என்ற சூத்திரம், களவொழுக்கமே எண்வகை மணங்களில் ஒன்றான கந்தருவ மணம் என்கிறது.

கந்தருவ மணம் என்பது "புனலொடு புல்சாய்ந்தாற்போல மெய்யுறு புணர்ச்சியிற் கூடி மகிழும் இயல்பே கந்தர்வ மணமாகும். இங்ஙனம் புணர்ந்தோர் இறுதிவரை கூடிவாழ்வர் என்ற உறுதி இல்லை. எதிர்ப்பட்ட அளவில் வேட்கை மிகுதியால் கூடிப் பின் அன்பின்றிப் பிரிந்து செல்லும் மனப்பான்மையும் இவ்வகை மணத்திற்கு உண்டு. ஆனால் தமிழரின் களவொழுக்கமோ ஒத்த அன்பினால் கூடிய இருவரும் ஒருவராய் ஒழுகும் உள்ளப் புணர்ச்சியாகும். இவ்வுள்ளப் புணர்ச்சி நிகழ்வுற்ற பின்னர் ஒருவரை ஒருவர் பிரிதலின்றி உலகோர் அறிய மணந்து இல்லற வாழ்வை மேற்கொள்ளும் கற்பென்னுந் திண்மை தமிழரின் களவொழுக்கத்தின் முடிந்த பயனாகும். களவொழுக்கத்தின் சிறப்பியல்பாகும். இதுவே களவொழுக்கத்திற்கும் கந்தர்வ மணத்திற்கும் உள்ள உயர்நிலையான வேற்றுமையும் ஆகும்."(சசிவல்லி, 2010; 21 ) என்று முனைவர் வி.சி. சசிவல்லி கூறுகிறார். இவ்வாறு தமிழரின் களவுப் புணர்ச்சியைக் கந்தருவமாகத் தொல்காப்பியர் கூறினார் எனினும் தமிழர்க்கு அவ்வொழுக்கம் ஆரியரிடமிருந்து வந்தது என்பது தொல்காப்பியரின் கருத்தன்று. இதனால்தான் களவொழுக்கத்தினை மெய்யொடு புணர்ந்த என்று கூறாமல், அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் காமக் கூட்டம் என்று குறிப்பிடுவதின் மூலமும் நாம் அறிந்துகொள்ளமுடிகிறது. மேலும், "தமிழர் மணமுறையை விளக்கவந்த தொல்காப்பியர் கந்தருவ மணமுறையோடு உவமைப்படுத்திக் கூறி இருப்பதை எளிதாக ஒதுக்கிவிட இயலாது. கந்தருவர் மணமுறை பற்றி நன்கு அறிந்திருந்த பிற்காலத்து இலக்கண நூலாரும் உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் இந்த உவமைக்குப் பல்வேறு கோணங்களில் விளக்கம் கூற முனைந்துள்ளதையும் அறிய முடிகின்றது."(செல்வராசு, 2010; 176) என்று சிலப்பு நா. செல்வராசு கூறுகிறார்.

**சகுந்தலையின் கந்தர்வ மணம்**

காளிதாசன், மகாபாரதக் கதாப்பாத்திரமான சகுந்தலாவைக் கவி நயத்துடன் 'சாகுந்தலம்' என்னும் காப்பியமாகப் படைத்தார். விசுவாமித்திரரை மயக்க இந்திரலோக பேரழகி மேனகையை இந்திரன் அனுப்புகிறான்; அவளும் மயக்கியதுடன் மயங்கியும் விட்டாள்; அதனால் அவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறக்கிறது; அதுவே சகுந்தலா என்ற இந்த காவியத்தின் நாயகி; மேனகையையும் அவள் குழந்தையையும்

விசுவாமித்திரர் கோபத்தில் விரட்டி விட்டார். மேனகை இந்திர லோகம் சென்றுவிட்டாள்; குழந்தையை அப்படியே காட்டில் போட்டுவிட்டு போய்விடுகிறாள்; சகுந்தல பறவைகள் அந்தக் குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்கிறது. அப்போது அந்தக் காட்டில் தவம் செய்யும் கன்வ முனிவர் அந்த குழந்தையைப் பார்த்து அந்த குழந்தையைச் தூக்கிச்சென்று வளர்க்கிறார்; சகுந்தல பறவைகள் வளர்த்ததால் அவளுக்கு சகுந்தலா என்ற பெயரை வைக்கிறார்; பருவம் அடைந்த சகுந்தலா காட்டில் உலா வருகிறாள்; அப்போது, அந்த நாட்டு இளவரசன் துஷ்யந்தன், காட்டுக்கு வேட்டைக்கு வந்தவன் இவளைப் பார்க்கிறான்; இவளும் இளவரசனைப் பார்க்கிறாள்; காதல் மலர்கிறதாம்; கற்பை இழக்கிறாள்; திருமணம் செய்யும்படி கேட்கிறாள்; அவனும் திருமணம் செய்து கொள்கிறான்; எந்த சாட்சியும் இல்லாமல் நடக்கும் திருமணம்; காந்தர்வ அல்லது கந்தர்வ காதல் திருமணம்.

கந்தருவத்தின் நீட்சி திருமுருகாற்றுப்படை(138-147), நாலாயிரதிவ்ய பிரபந்தம்(பெ.தி.03.08.06) மாறனகப்பொருள்(சூ.1), பிரபந்ததீபிகை(சூ.74), சீவக சிந்தாமணி போன்ற பல நூல்களிலும், இந்தக் காலத்திலும் தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது. சாவி எழுதிய ஆப்பிள் பசி என்கிற நாவலில் காணப்படுகிறது. டெல்லி தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் காந்தர்வ இசை நிகழ்ச்சியை நடத்துகிறது. பாரதி இயற்றிய ஞானரதத்தில் 'காந்தர்வ பாஷை' என்பதாக ஓரிடம் வருகிறது. ஜோதிடமானது கும்ப ராசி, தனுசு நட்சத்திரத்தை காந்தர்வம் என்கிறது. இவை போன்று தமிழிலக்கியங்களில் கந்தருவம் பற்றிய பல பதிவுகளைக் காணமுடிகிறது.

**திரைப்படங்களில் கந்தருவ மணம்**

தமிழ்த் திரைப்படங்கள் பலவற்றில் கந்தருவ மணப் பதிவுகள் காணப்படுகின்றன. குடியிருந்த கோயில், பாட்டும் பரதமும், மைக்கேல் மதன காமராஜன், அலைபாயுதே முதலிய திரைப்படங்களில் கந்தருவ மணக்காட்சிகளைக் காணமுடிகிறது. அவற்றில், மைக்கேல் மதன காம ராஜனில் ரூபினியுடனான, 'சிவராத்திரி தூக்கமேது..' பாடலில் இளையராஜா ஒரு மதன ராஜாங்கமே நடத்தியிருக்கிறார். 'அவர் என்னைப் பளார்னு அறைஞ்சா என்ன பண்றது?' என ரூபினி கேட்க, 'அடிக்கட்டும், அதிர்ஷ்டம் அடிக்கும்னு கேட்டதில்லை' என்று கூறி, 'இதற்கெல்லாம் முதல்ல மூடு கிரியேட் பண்ணணும்...' என்று லைட்டை ஆஃப் செய்து, மனோரமா பாடலைத் தொடங்கி வைப்பார். அவரே மறைந்திருந்து மகளுக்கு எப்படி அபிநயம் பிடிக்க வேண்டும் என்று சொல்லியும் தருவார். இந்தப் பாடலில் கமல் காமதேவனாகவே மாறி நடித்திருப்பார். பாடல் நடுவில் மோதிரம் அணிவித்து ரூபினியைக் கந்தருவ திருமணம் செய்து தனது லீலைகளை தொடர்வார்.

ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மனம் ஈடுபட்டு அவர்களே தீர்மானித்து செய்துகொள்வது கந்தருவ மணம். இதில் பெரியவர்கள் சம்மதமோ துணையோ இருக்காது. நிலம் காற்று வானம் என்று இயற்கை மட்டும் சாட்சியாக நிற்கும் நிகழ்வு. கந்தருவ மணம் என்று கேட்டவுடன் துஷ்யந்தன் சகுந்தலையை மணந்து பின் மறந்த காளிதாசன் காவியக் காட்சிகள் ராஜா ரவிவர்மாவின் ஓவியங்களாக

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2025, IRJTSR 

விரிகிறது. அலைபாயுதே மாதவனும் ஷாலினியும் நினைவுக்கு வருகிறார்கள். இன்றைய 'கல்யாணம்தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா இல்ல ஓடிப்போயி கல்யாணம்தான் கட்டிக்கலாமா' எல்லாம் இந்த வகைதானோ என்ற கோணத்தில் இனிவரும் ஆய்வாளர்கள் நோக்கலாம்.

திருமணம் குறித்த திரைப்பாடல்கள் பலவற்றில் கந்தருவ மணம் குறித்துப் பாடப்படும் பாடல்களாகக் குடியிருந்த கோயில், பாட்டும் பரதமும் ஆகிய படங்களிலுள்ள பாடல்களை இங்கே உதாரணமாகக் கொள்ளலாம். குடியிருந்த கோயில் படத்தில் வரும் வாலி எழுதிய நீயேதான் எனக்கு மணவாட்டி பாடலில் ஆண் பாடும் வரிகள்,

"கண்கள் இருக்க தோரணம் ஏனோ
கைகள் இருக்க மாலைகள் ஏனோ
உள்ளம் இருக்க மணவறை ஏனோ
ஒரு மனதானால் திருமணம் ஏனோ" (குடியிருந்த கோயில்)

இதில், தோரணம் இல்லை மாலைகள் இல்லை மணவறை இல்லை. ஆனால் ஒரு மனதாகியதால் திருமணம் என்ற சடங்கே தேவையில்லை என்ற தொனி. அவளுக்கும் சம்மதம்தான். பல பிறவியில் சேர்ந்து வாழ்ந்தவர்கள்தானே, இறைவன் எழுதி வைத்ததுதானே என்று சரணடைகிறாள். இதற்கு சாட்சி? அடுத்த சரணத்தில் கவிஞர் சொல்லும் அல்லி, சந்திரன், தாமரை, சூரியன் என்று பட்டியல். ஒரு இரவில் தொடங்கி விடியல் வரை. இது கந்தருவ மணத்தின் எச்சம் என அறியமுடிகிறது.

பாட்டும் பரதமும் என்ற படத்தில் கண்ணதாசன் எழுதிய மாந்தோரண வீதியில் என்ற பாடல்,

"மாந்தோரண வீதியில் மேளங்கள் ராகம்
மாப்பிள்ளை பெண்ணுக்கு ஏனிந்த மோகம்"(பாட்டும் பரதமும்)

எனும் வரிகளில், மாப்பிள்ளை பெண் இருவரையும் அடையாளம் காட்டி தோரணம் கட்டி ஒரு காட்சியை விவரிக்கிறார். முதல் சரணத்தில் ஒரு பொடி வைத்தது போல் இருக்கிறது. மேலும்,

"பூவைக்கும் எனக்கும் நிச்சயதார்த்தம்
பூவினில் தேனீ சாந்தி முகூர்த்தம்"

இவ்வரிகளில், அட நிச்சயம் செய்தபின் நடக்கும் கல்யாணம் சொல்லவேயில்லையே? கதையில் வரும் காட்சிக்கு ஏற்ற கற்பனை. அடுத்தது,

"ஆதித்யன் மேனியை மேகங்கள் மூட
ஆனந்த பூந்தென்றல் மோகனம் பாட
வசந்தத்தில் பாற்குடம் ஊர்வலம் போக
வந்து விட்டேன் கண்ணா மணமகளாக"

என்று சரணத்தில் சூரியன், மேகங்கள் பூந்தென்றல் சாட்சியாக மணமகளாகிறாள். இதுவும் கந்தருவ மணம்தான். தொடர்ந்து வருவது,

"ஆவியில் ஆவியை ஆண்டவன் சேர்க்க,
ஆனந்தம் நான் கொள்ள யாரிடம் கேட்க"

என்ற வரிகளில், நாங்கள் இருவரும் மனதால் இணைந்தபின் யார் அனுமதி தேவை என்ற கேள்வியாக அமைவதைக் காணமுடிகிறது.

**களவு கந்தருவமாகாது**

களவு மணத்தில் தலைவனும் தலைவியும் சந்திப்பதாகிய தொடக்க நிலையை மட்டுமே குறிக்கும். கந்தருவ மணத்திலோ பிறரறியாமல் இருவரும் திருமணமே செய்து கொள்கின்றனர். "களவுக் கூட்டம் உள்ளப்புணர்ச்சி ஒன்றையே குறிக்கும். நாடறியத் திருமணம் நடைபெற்ற பின்னரே பிள்ளைப் பேற்றிற்கான உடற்கூடுதல் நடைபெறும். கந்தர்வக் கூட்டத்தில் திருமணம் என்ற ஒன்று இல்லாமலேயே கூடுதல் நிகழ்ந்து விடுகிறது. சகுந்தலை- துஷ்யந்தன் கதை சான்றாம்"(மணிமேகலை புட்பராசு, 2003:63). ஆரியக் கந்தருவம் கற்பின்றியும் அமையும். தமிழ்ப் பண்பாட்டிலோ கற்பில்லாத களவு அறமாகக் கருதப்படுவதில்லை.

களவொழுக்கத்தில் இளைஞனும் கன்னியும் தலைவன் தலைவியாக இருப்பாரேயன்றிக் கணவன் மனைவியாக இருக்கமாட்டார்கள். ஆனால், ஆரியரின் கந்தருவம் தமிழரின் களவு என்பதிலிருந்து வேறுபட்டிருப்பது; களவு தனித்த பண்பு நலம் வாய்ந்தது; ஒருவரையொருவர் உள்ளத்தால் மட்டும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இருப்பது; ஈருளமும் ஓருளமாக இணைந்த நிலையில் திருமணம் நடைபெற்ற பின்னரே கற்பு வாழ்க்கை தொடங்குகிறது.

"ஆரிய மணங்கள் எட்டனுள்ளும் களவொழுக்கத்தின் உயிர் நாடியான ஒத்த அன்பு, ஒன்றுபட்ட உள்ளங்கள், அவ்வாறு ஒன்றிய உள்ளங்களின் உயர்நோக்கு ஆகியவை காணப்படாமை" (மணிமேகலை புட்பராசு, 2003:63) தெளிவாகத் தெரிகிறது.

**கந்தருவ திருமண முறையும் இந்தியாவின் அதன் எதிர்காலமும்**

இந்திய சமூகத்தில் மிகவும் தவறுதலாகப் புரிந்து கொள்ளப்பட்டு பல்வேறு காலங்களில் வேத வல்லுனர்களாலும், நீதி மன்றங்களாலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட ஒரு திருமண முறை உண்டென்றால் அது கந்தர்வ முறையாகத்தான் இருக்க முடியும். ஒரு பெண்ணுக்கும் ஆணுக்குமான ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு தகுந்த சடங்குகளுடன் அவர்கள் மணமுடிக்குங்கால் அதனை சட்டபூர்வமில்லாதது என்று ஒதுக்கி விட முடியாது. சில சமயங்களில் கந்தருவ திருமணங்களில் சடங்குகள் ஆணும் பெண்ணும் உடலுறவு கொண்ட பின் நிறைவேற்றப் படுகிறது. ஒரு மணமகள் தன் சுய விருப்பத்தில் மணமகனைத் தானே தேர்ந்தெடுக்கும் சுயம்வரமே ஒரு வகையான கந்தருவ திருமணம்தான்.

கந்தருவ வகை திருமணங்கள் ஆதிகாலம் தொட்டே நிலவி வருவது மட்டுமல்லாமல் பல்வேறு ரிஷிக்களால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறது. தர்ம சாஸ்திரங்கள் என்று அழைக்கப்படும் ஸ்மிருதிகள், 'பருவமடைந்து மூன்று ஆண்டுகள் மணமுடிக்கப்படாமல் இருக்கும் ஒரு பெண் தன்னுடய


© 2025, IRJTSR

பிரிவுக்குள் தானே ஒரு மணமகனைத் தேர்ந்தெடுத்து மணமுடிக்க' அனுமதி தருகிறது. ஆதிகாலத்தில் கந்தருவ முறை ஷத்திரியர்களுக்கு மட்டுமே உரியது என்று கருதப்பட்டாலும் மனு, பௌதன்யர், நாரதர், யக்ஞவல்கியர் போன்றவர்கள் அனைத்து பிரிவுகளுக்கும் ஏற்றது என்று கூறிய படியால் அனைத்து பிரிவுகளிலும் சட்டர்பூர்வமாகக் கருதப்பட்டது. ஜாதிக்கு ஜாதி காதல் உணர்வுகள் வேறுபடுவதில்லை. ஆனாலும், கந்தருவ முறைகளைப் பற்றி எழுந்த குழப்பங்கள் நீதிமன்ற தீர்ப்புகளையும் பாதித்தது. கந்தருவ முறை வழக்கொழிந்து விட்டதா இல்லையா? என்ற சந்தேகங்கள் பல எழுந்து சில முன்னுக்குப் பின் முரணான தீர்ப்புகள் கூறப்பட்டன. ஆனாலும் காலப்போக்கில் திருமண சடங்குகள் கடைபிடிக்கப்படுகையில் கந்தருவ திருமணங்கள் செல்லும் என்பது பொதுவாக ஒத்துக் கொள்ளப்பட்ட சட்டக்கருத்தாக உருப்பெற்றது.

தற்போது சட்டரீதியாக, இப்படிப்பட்ட திருமண முறைகள் அவசியமில்லாத ஒன்று. 1954- ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சிறப்புத் திருமண சட்டம் (Special Marriage Act'1954) மனம் ஒத்த இரு இந்துக்கள் பெற்றோர் சம்மதம் இல்லாமல் சடங்குகளைப் பின்பற்றாமல் திருமண பதிவாளர் முன்னிலையில் சட்டரீதியாக திருமணம் செய்து கொள்ள வழி வகுத்தது. ஆனால் அத்தகைய மணமக்களுக்கு சொத்துரிமை வழங்குவதில் சில குழப்பங்கள் ஏற்பட்டு 1976- ஆம் ஆண்டு ஏற்பட்ட சட்ட மாறுதல்கள் மூலம் பிரச்சனைகள் முற்றிலும் நீக்கப்பட்டன.

கந்தருவ முறை மணம் புரிபவர்கள் தற்போது சிறப்புத் திருமண சட்டம்1954 அல்லது தமிழ்நாட்டைச் சேர்ந்தவராயிருப்பின் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் வரும் சுயமரியாதை அல்லது சீர்திருத்த திருமணங்களைப் குறித்த சிறப்பு ஷரத்துகளின் அடிப்படையில் திருமணம் புரிந்து கொள்ள வகையிருக்கிறது. கணவன் மனைவிக்கிடையே நிலவும் அன்பும், ஒருவரையொருவர் சார்ந்திருக்கும் தன்மையைத் தவிர வேறு எந்த தாலியும் திருமண பந்தத்திற்கு வேலி இல்லை என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது.

**முடிவுரை**

தமிழரின் களவு என்பது தலைவனும் தலைவியும் சந்திக்கும் தொடக்க நிலையையே குறிக்கிறது. ஆனால் கந்தருவ மணத்தில் பிறரறியாமல் இருவரும் திருமணம் செய்து கொள்ளும் நிலையைக் காணமுடிகிறது. கந்தருவ மணமுறை புராணம், இலக்கண இலக்கியங்களில் இடம் பெறுவதையும், அந்த நூல்களுக்கு உரையெழுதியோர் அம்மணமுறையை விளக்கின விதத்தையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது. களவொழுக்கத்தில் இளைஞனும் கன்னியும் தலைவன் தலைவியாக இருப்பாரேயன்றிக் கணவன் மனைவியாக இருக்கமாட்டார்கள். ஆனால், ஆரியரின் கந்தருவம் தமிழரின் களவு என்பதிலிருந்து வேறுபட்டிருப்பது. களவு தனித்த பண்பு நலம் வாய்ந்தது; ஒருவரையொருவர் உள்ளத்தால் மட்டும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து இருப்பது; ஈருளமும் ஓருளமாக இணைந்த நிலையில் திருமணம் நடைபெற்ற பின்னரே கற்பு வாழ்க்கை தொடங்குகிறது.

காந்த துருவம் எதிர் துருவத்தை கவர்ந்திழுப்பதைப் போல இரு பாலினங்கள் ஒன்றையொன்று கவர்ந்துகொள்வது காந்தருவம். தொல்காப்பியம் களவு- கற்பு என்ற இருநிலைகளைப்பற்றி மொழிய இறையனார் அகப்பொருளுரை எண்வகை மணப்பட்டியல் தந்து அதன் கந்தருவத்தைக் களவுடன் ஒக்கவைக்க நினைக்கிறது. கந்தருவ திருமணத்தைத்தான் சகுந்தலை செய்திருக்கிறாள். மகாகவி காளிதாசன் இந்த கதையை “அபிஞான சகுந்தலம்” என்ற காப்பியமாகப் படைத்திருக்கிறான். கந்தருவம் குறித்து சங்கப்பாடல்களில் தேடுகையில் அகப்பாடல்கள் களவு, களவொழுக்கம் என்கின்றன. எனவே நம் பழந்தமிழ் மரபில் கந்தருவம் இல்லையென்பதையும் களவு இருந்தது என்பதையும், தற்காலத்தில் சமூகத்திலும் திரைப்படங்களிலும் களவும், கந்தருவமும் இடம்பெற்றுள்ளள்ளதை இக்கட்டுரை வாயிலாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1] இராகவையங்கார், மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, தமிழ்ச்சங்கத்து பிரசுரம், மதுரை, 1922

[2] இளம்பூரணம்(உரை), தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியிடு, சென்னை, 1961

[3] கண்ணன், முனைவர் இரா. (உ.ஆ), மாறனகப் பொருள், கூத்தன் பதிப்பகம், சென்னை, 2003.

[4] கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ), தமிழ் மொழி அகராதி, சாரதா பதிபகம், சென்னை, 2012.

[5] சசிவல்லி, முனைவர் வி. சி. தமிழர் திருமணம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.

[6] சண்முகம்பிள்ளை, மு. (ப.ஆ), தொல்காப்பியம் பொருளதிகாரம்- இளம்பூரணம்-2, முல்லை நிலையம், சென்னை, 2006.

[7] சந்தியா நடராஜன்(ப.ஆ), மதுரைத் தமிழ்ப் பேரகராதி- முதல் பாகம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2004.

[8] சிவலிங்கனார், ஆ. களவியல் உரைவளம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994.

[9] தேவநாதன்,வி.என்(ப.ஆ), நாலாயிர திவ்யப்பிரபந்தம், கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை, 1971.

[10] நக்கீரனார்(உ.ஆ), இறையனார் அகப்பொருள், கழக வெளியீடு, சென்னை, 1964.

[11] பகவதி கோவிந்தன், முனைவர் ச., தொல்காப்பியக் கொள்கைகளும் கலித்தொகையும், பகவதி பதிப்பகம், சென்னை, 2018

[12] மணிமேகலை புட்பராசு, டாக்டர்., கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள், பாவேந்தன் நினைவு அறக்கட்டளை, சென்னை, 2003

[13] மாணிக்கனார், அ.(உரை), பரிபாடல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1999

[14] மாணிக்கனார், வ.சுப., தமிழ்க் காதல், சாரதா பதிப்பகம், சென்னை, 2012

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*